திருமதி . சொருபகாந்தி மகேஸ்வரன்
ஆசிரியர் - வரலாறு
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா
வித்தியாலயம்

# தரம் 11

# அலகு 4

# பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றம்

- பிரித்தானியர் 1815 ஆம் ஆண்டு கண்டி இராசதானியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து 1948 ம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெறும் வரையிலான 133 வருடங்கள் முழு இலங்கையையும் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

- இக் காலப்பகுதியில் பிரித்தானியரால் காலத்திற்கு காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அச் சீர்திருத்தங்களினால் திருப்தியடையாத இலங்கையர்கள் ஆட்சி நடவடிக்கைகளில் தம்மிடம் கூடிய அதிகாரங்களை கையளிக்கும் படி கோரி போராட்டங்களில் ஈடுபட்டனர்.

- 1948ம் ஆண்டில் ஆட்சி அதிகாரத்தினை இலங்கையர் பெற்றுக்கொள்வதற்கு இப் போராட்டங்களே காரணமாகும்.

# 1833 கோல்புறூக் சீர்திருத்தம்

- 1815ம் ஆண்டிலிருந்து பிரித்தானிய ஆளுநர்கள் இலங்கையில் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, வருமானத்தை விட செலவு அதிகரித்துச் சென்றது.

- குடியேற்ற நாடு ஒன்றின் தேவைக்காக தொடர்ந்து பணம் செலவிடுவதற்கு பிரித்தானிய அரசிற்கு விருப்பம் இருக்கவில்லை.

- ஆகையால் இன்நாட்டின் தேவையை அவதானித்து தேவையான ஆலோசனையை வழங்குமாறு W.M.G. கோல்புறூக் என்பவரின் தலைமையில் ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
- 1829 - **கோல்புறூக்** என்பவர் **அரசியல் பொருளியல்** பற்றி ஆராயவும்
- 1830 – **சார்ள்ச் H கமரன் நீதி** சார் நடவடிக்கைகளைப் பற்றி ஆராயவும் அனுப்பப்பட்டனர்.

- 1833ம் ஆண்டு கோல்புறூக் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே கோல்புறூக் சீர்திருத்தமாகும்

# கோல்புறூக் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்

- சட்டவாக்க சபை சட்டநிருவாக சபை அமைக்கப்பட்டன.
- மலைநாடும், கரையோரப் பிரதேசங்களும் ஒன்றினைக்கப்பட்டு ஓரே ஆட்சி முறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.
- நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை.
- கட்டாய அரச கரும முறை ஒழிக்கப்பட்டமை
- அரசின் வர்த்தக ஏகபோக முறை அகற்றப்பட்டமை
- ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட்டமை

# சட்டவாக்க சட்டநிருவாக சபைகள்

- கோல்புறூக் ஆணைக்குழு இந் நாட்டிற்கு வரும் போது சட்டவாக்க, சட்டநிர்வாக, நீதித்துறை அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநரிடம் குவிந்து காணப்பட்டது. இதனால் அவ் அதிகாரங்களை குறைப்பதற்காகவே இவ் சபைகள் உருவாக்கப்பட்டன.

# சட்டவாக்க சபை

15அங்கத்தவர்கள்

- உத்தியோக சார்புள்ளோர் (அரசின் உயர் அதிகதரிகள்) 09
- உத்தியோக சார்பற்றோர் (ஆளுநரின் நியமணம்) 06
  - ஐரோப்பியர் 03
  - சிங்களவர் 01
  - தமிழர் 01
  - பறங்கியர் 01

- உத்தியோகசார்பற்ற அங்கத்தவர்கள் இன ரீதியாக நியமிக்கப்பட்டமையால் **இனவாரிப் பிரதிநிதித்துவ முறை** எனப்பட்டது. இம் முறை எதிர்கால இலங்கையில் பாதகமான விளைவுகளைத் தோற்றிவைக்க காரணமாகியது.
- 1833ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டவாக்க சபை காலத்திற்குக் காலம் சீர்திருத்தத்திற்கு உள்ளானதன் காரணமாக இலங்கையருக்கு கிடைத்த அதிகாரங்களின் அளவு அதிகரித்து அதனூடாக இலங்கை எதிர்காலத்தில் பாராளுமன்ற ஆட்சியை நோக்கிச் செல்வதற்கான அத்திவாரமும் இடப்பட்டது.
- சட்டசபை உருவாக்கமானது இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் முக்கிய மைல் கல்லாக கருதமுடியும்.

**சட்ட நிருவாக சபை**

- இச்சபைக்கு குடியேற்றச் செயளாலர், பொருளாளர், கணக்காளர், அளவையாளர் போன்ற அரசின் உயரதிகாரிகள் இடம்பெற வேண்டுமென கோல்புறூக் குழுவினர் ஆரோசனை வழங்கினர்.
- நாட்டின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆளுநர் இச்சபையின் கருத்துக்களை கேட்டறிய வேண்டும் எனவும் கூறப்பட்டது.

## கரையோரத்தையும் கண்டியையும் ஒன்றினைத்து ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தமை

1815ம் ஆண்டு பிரித்தானியரால் கண்டி இராட்சியம் கைப்பற்றப்பட்டமையைத் தொடர்ந்தும் கண்டியும் கரையோரமும் வெவ்வேறான ஆட்சிமுறையின் கீழ் இருந்து வந்தது. இம் முறை அரச செலவினங்களை அதிகரிக்கும் என கோல்புறூக் குழுவினர் சுட்டிக்காட்டி இரண்டையும் ஒன்றினைந்து ஆட்சிசெய்ய ஆரோசனை வழங்கினர்.

## நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை

1833ம் ஆண்டு வரை நிருவாக நடவடிக்கைகளுக்காக இலங்கை 16 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான எண்ணிக்கையில் அதிகமான நிருவாகப் பிரிவுகளினால் அரச செலவினங்கள் அதிகரித்துச் செல்வதாக சுட்டிக்காட்டி ஆட்சிப் பிரதேசங்களை 5 மாகாணங்களாகப் பிரித்து 5 நிருவாக மையங்களை நிறுவுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

| மாகாணங்கள் | நிருவாக மையங்கள் |
|---|---|
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் |
| தென் மாகாணம் | காலி |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை |
| மேல் மாகாணம் | கொழும்பு |
| மத்திய மாகாணம் | கண்டி |

- **கட்டாய சேவை இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை**

- நாட்டிலிருந்த வயது வந்த ஆண்கள் அனைவரும் வருடத்தில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு அரசுக்கு இலவச சேவை ஆற்றுதல் கட்டாய சேவை இராஜகாரிய முறை எனப்பட்டது.(குளக்கட்டு கால்வாய் பாதைகள் புனரமைப்பது)

- பணம் செலுத்தாது பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த சேவை மக்களின் சுதந்திரத்திற்கு மட்டுமல்லாமல் முன்னேற்றத்திற்கும் தடை எனச் சுட்டிக்காட்டி இவற்றை நீக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

- **ஆங்கிலக்கல்வி பரவலாக்கப்பட்டமை**

- அரச செலவினங்கள் அதிகரிப்பதற்கான பிரதான காரணி இந்நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளுக்கென அதிகாரிகள் ஐரோப்பாவிலிருந்து வரவழைக்கப்பட்டமை ஆகும். எனவே வெளிநாட்டு அதிகாரிகளுக்குப் பதிலாக உள்நாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

- **ஐரோப்பியரின் போராட்டம்**
- கோல்புறூக் சீர்திருத்தங்களில் சில அம்பங்களை மாற்றி அமைத்துக்கொள்ளும் போராட்டம் ஒன்றை முதலில் இந்நாட்டில் வாழ்ந்த ஐரோப்பிய வணிகர்கள் முன்னெடுத்தனர்.
- இந்நாட்டில் பெருந்தோட்டத்துறையில் ஈடுபட்டிருந்த ஐரோப்பியருக்கு தோட்டத் துறைக்கான பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை மேம்படுத்த வேண்டிய தேவை இருந்தது.
- சட்டவாக்க சபையில் உத்தியோகசார்பற்றோர் சிறுபான்மையோராக இருந்தமை உத்தியோகசார்பற்றோர் ஆளுநரினால் நியமிக்கப்பட்டமை போன்ற விடயங்களில் அதிருப்தி அடைந்து போராட்டங்களை ஆரம்பித்தனர்.
- போராட்டங்கள் சட்டவாக்க சபையில் கேள்வி கேட்டல், ஆலோசனை சமர்ப்பிப்பது

  பத்திரிகைகளில் கவனயீர்ப்பு கட்டுரைகளை எழுதுதல்

  போராட்டங்களை மேற்கொள்வதற்கான அமைப்புக்களைத் தோற்றிவித்தல்.

  **உதாரணமாக** - 1865ம் ஆண்டு ஜோர்ஜ் வோல் என்பவரால் **இலங்கையர் சங்கம்** என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டமை.
- போராட்டங்களின் விளைவினால் 1889ல் சட்டவாக்க சபையின் உத்தியோக சார்பற்றோர் தொகை 8 ஆக அதிகரித்தது. முஸ்லிம் -1 மலைநாட்டுச் சிங்களவர் -1
- இப் போராட்டங்கள் இலங்கையர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியது

## 1910 ஆம் ஆண்டு சீர்திருத்தங்களும் அதற்கான பின்னணியும்

- இலங்கை மத்தியதர வர்க்கத்தினரின் கோரிக்கை

- கோல்புறூக் சீர்திருத்தத்தின் பின் இந்நாட்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமையாலும் ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார முறைமை ஒன்று தோற்றம் பெற்றமையாலும் இலங்கையர்கள் பல்வேறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பணம் சம்பாதித்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.
- இவ்வாறு உருவான இலங்கைச் செல்வந்தர்கள் தமது பிள்ளைகளுக்கு இந்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதன் விளைவாக ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றது
- 1833ல் இருந்து 70 ஆண்டு காலகட்டத்தினுள் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றத்திற்கு இயல்பாக அரசியல் துறையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. எனவே மத்தியதர வர்க்கத்தினர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தேவை என கோரிக்கை முன் வைத்தனர்.
- 1908ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களால் யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கை குடியேற்ற நாட்டுச் செயலாளரிடம் முன்வைக்கப்பட்டது.
- இதனைத் தொடர்ந்து இன்னும் பல இயக்கங்களும் கோரிக்கையை முன் வைத்தன.
- உ+ம் கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கம், சிலாபச் சங்கம், யாழ்ப்பாணச் சங்கம்

- முன் வைக்கப்பட்ட முக்கிய சில கோரிக்கைகள்

- சட்டவாக்க சபையில் உத்தியோக சார்பற்றோர் தொகையை அதிகரித்தல்
- சட்டவாக்க சபைக்கு வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல்
- இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்

- (75 ஆண்டுகள் பழமையான யாப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு)

- இலங்கையின் ஆளுநரான ஹென்றி மக்கலம் என்பவரின் ஆலோசனையின் படி குறூ பிரபுவினால் 1910ம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் இலங்கைக்கு வழங்கப்பட்டது. இது குறூ மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எனப்பட்டது.

- சட்டவாக்க சபை அங்கத்தவர் 21
  - உத்தியோக சார்புள்ளோர் 11
  - உத்தியோக சார்பற்றோர் 10
    - வாக்குரிமை மூலம் 04
      - ஐரோப்பியர் 02
      - பறங்கியர் 01
      - படித்த இலங்கையர் 01
    - நியமனம் மூலம் 06

- **குறூ மக்கலம் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்**

- சட்டவாக்க சபைக்கு முதன் முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை. (வரையறுத்த பால் கல்வி சொத்து)

- இலங்கையில் கல்வி கற்ற பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை.

  (சேர். பொன்னம்பலம் இராமநாதன்)

## ▪ மது ஒழிப்பு இயக்கம்

- 1910ம் ஆண்டு அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் இலங்கையரின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை
- 1912ம் ஆண்டு அரசாங்கத்தால் மதுபானசாலைகளை அமைப்பதற்கு அனுமதி அளிக்கும் புதிய சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
- இதனை எதிர்த்து மத்திய தர வர்க்கத்தினர் மது ஒழிப்பு இயக்கத்தினை ஆரம்பித்தனர்.
- 1912ம் ஆண்டு உருவாகிய மது ஒழிப்பு இயக்கம் அரசாங்கத்தின் மதுவரிக் கொள்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது.
- இது அரசியல் தன்மையுடன் கூடிய இயக்கமாக உருப்பெற்றது.
- இவ்வியக்கத்தின் செயற்பாட்டால் சில பிரதேசங்களில் இயங்கிய மதுச்சாலைகள் மூடப்பட்டன.
- புதிய மதுச்சாலைகளை அமைக்க இடங்களைப் பெறுவது சிரமமாக காணப்பட்டது.
- எனினும் அடக்கு முறைகளினூடாக இவ் இயக்கம் முடக்கப்பட்டன.
- எனினும் இவ்வியக்கத்தினூடாக அரசியலுக்கு வந்த தலைவர்களும் உள்ளனர்.
- உ+ம் - F.R சேனாநாயக்க, D.S சேனாநாயக்க, D.P ஜயதிலக


## இலங்கை தேசிய சங்கம்

- 1919ம் ஆண்டு வரை இந்நாட்டில் அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பதற்கென ஒரு பொதுவான அமைப்பு இல்லை.
- சிறிய அமைப்புக்களினால் பலம் வாய்ந்த முறையில் குரலெழுப்ப முடியவில்லை.
- இந்தியர்கள் இந்திய தேசிய சங்கத்தினை தோற்றுவித்து ஒன்றுபட்டு செயலாற்றியமையை முன் உதாரணமாகக் கொண்டு
- 1919 டிசம்பரில் இலங்கை தேசிய சங்கம் உருவாக்கப்பட்டது.
- தலைவர் - சேர். பொன்னம்பலம் அருணாசலம்
- சகல இயக்கங்களும் எல்லா இனங்களும் ஒன்றுபட்டு இச் சங்கத்தில் செயற்பட்டது இந்நாட்டு வரலாற்றின் முக்கியமான ஓர் சந்தர்ப்பமாகும்.
- இலங்கையர் கைகளுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் சங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

- **மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் - 1920**

- குறூ –மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தினால் திருப்தியடையாத இலங்கையரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களால் 1920ல் மற்றுமொரு சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

- அப்போதய இலங்கை ஆளுநரான வில்லியம் மனிங் என்பவரின் ஆலோசனையால் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தம் ஆகையால் மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எனப்பட்டது.


சட்டவாக்க சபை
37
உத்தியோக சார்புள்ளோர்
14
உத்தியோக சார்பற்றோர்
23
நியமனம்
07
வாக்குரிமை
16

- **மனிங் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் முக்கிய பண்புகள்**
- சட்டவாக்க சபைக்கு உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை.
- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகமானது.
- இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் காணப்பட்டன.


- **மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் - 1924**

- மனிங் அரசியல் யாப்பில் ஆளுனரின் அதிகாரம் குறைக்கப்படவில்லை.

- இலங்கை தேசிய சங்கம் இச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

- குறுகிய காலத்தில் இன்னுமொரு யாப்புச் சீர்திருத்தம் பெற்றுத் தருவதாக ஆளுநர் வில்லியம் மனிங் வாக்களித்தார்.

- இதன் விளைவாக 1924ல் ஆளுநர் வில்லியம் மனிங்கின் சிபாரிசின் பெயரில் குடியேற்ற நாட்டுச் செயலாளர் டெவன்சியரால் ஒழுங்கமைக்கப்பட்ட இச் சீர்திருத்தம் மனிங் - டெவன்சியர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எனப்பட்டது.


சட்டவாக்க சபை
49
உத்தியோக சார்புள்ளோர்
12
உத்தியோக சார்பற்றோர்
37
வாக்குரிமை
29
நியமனம்
08
பிரதேசரீதியாக
23
இனரீதியாக
06

- ஆட்சி நடத்தும் பொறுப்பு ஆளுநரிடமும் இச் சீர்திருத்தத்தின் படி அதிகாரம் மக்கள் பிரதிநிதியிடமும் காணப்பட்டமையால் ஆட்சிமுறையைக் கொண்டு நடத்துவதில் சிரமம் ஏற்பட்டது.

- வில்லியம் மனிங்கிற்குப் பின் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஹியூ கிளிபர்ட் இந்நிலையை குடியேற்ற நாட்டு செயலகத்திற்கு அறிவித்தார்.

- இதனை பரிசீலித்து ஆலோசனையை வழங்க டொனமூர் பிரபு தலைமையில் ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

- டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தம்

- 1927ம் ஆண்டு இலங்கைக்கு வந்த டொனமூர் பிரபு தலைமையிலான ஆணைக்குழவின் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் 1931ம் ஆண்டு உருவாக்கப்பட்டதே டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஆகும்

- டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் முக்கிய பண்புகள்
- அரசுக் கழகம்
- சர்வசன வாக்குரிமை
- நிர்வாகக் குழுமுறை
- ஆளுநரும் அரச அதிகாரிகளும்

அரசுக் கழகம்

61

மாகாண வாரியாக
தேர்தல் தொகுதிகளில்
இருந்து தெரிவு

50

ஆளுநர் நியமனம

08

அரச உத்தியோகத்தர்கள்

03

அரச செயலாளர்
நிதிச் செயலாளர்
சட்டச் செயலாளர

- **சர்வசன வாக்குரிமை**
- 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலருக்கும் வழங்கப்பட்ட வாக்குரிமை.

- **நிர்வாகக் குழுமுறை**
- சட்டவாக்க சட்ட நிருவாக துறையினருக்கிடையில் தொடர்புகள் ஏற்பட்டன.
- அரசுக் கழக அங்கத்தவர்கள் 7 குழக்களாக பிரிக்கப்பட்டனர்.

  உள்நாட்டு அலுவல்கள்

  விவசாயமும் காணியும்

  உள்ளூராட்சி

  சுகாதாரம்

  கல்வி

  போக்குவரத்தும் பொது வேலையும்

  தொழில் கைத்தொழில் வர்த்தகம்

- **ஆளுநரும் அரச அதிகாரிகளும்**
- ஆளுநரின் அதிகாரம் குறைக்கப்பட்டமை
- 3 அரச உத்தியோகத்தர்களும் குறையாக காணப்பட்டமை. (பாதுகாப்பு நிதி சட்டம்)

- சுதந்திரப் போராட்டம்

- டொனமூர் அரசியல் யாப்பின் ஊடாக இலங்கையர்களுக்கு குறிப்பிட்ட அளவு அதிகாரம் வழங்கப்பட்டாலும் 3 அரச அதிகாரிகளிடம் முக்கியமான அதிகாரங்கள் வழங்கப்படடிருந்தன.

- அரச அதிகார்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை இலங்கை அமைச்சிடம் கையளிக்கும் படி போராட்டங்கள் ஆரம்பமானது.

- அதிகாரங்களை பெற்றுக் கொள்வதற்காக அரசுக் கழகம், அமைச்சரவை, இலங்கை தேசிய சங்கம் என்பன போராட்டத்தினை மேற்கொண்டன.

- சூரியமல் இயக்கம்
- இந்நாட்டு இடது சாரிகளால் சுதந்திரம் பெற்றுக் கொள்வதற்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
- பொப்பி மலர் இயக்கத்திற்கு எதிராக சூரியமல் இயக்கம் உருவாக்கப்பட்டது.
- **பொப்பி மலர்** :- முதலாம் உலக மகா யுத்தத்தில் அங்கவீனமுற்ற பிரித்தானிய இராணுவ வீரர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவி செய்வதற்காக உருவாக்கப்பட்டது.
- நவம்பர் 11ம் திகதி உலக சமாதான தினமாகப் பிரகடணப்படுத்தி ஓவ்வொரு வருடமும் அத்தினத்தில் பொப்பி மலர் விற்பனை இடம் பெற்றது.
- இத்தினத்தில் சூரிய காந்தி மலர் விற்பனை செய்யப்பட்டது.
- இதன் மூலம் கிடைக்கும் பணம் இந் நாட்டு ஏழை மக்களின் நலன்களுக்காக செலவிடப்பட்டது.

- அமைச்சரவையும் தேசிய சங்கமும்
- 1939ம் ஆண்டில் 2ம் உலகப் போர் ஆரம்பமானது.
- இதற்கு பிரித்தானியர்களுக்கு இலங்கையரின் உதவி தேவைப்பட்டது.
- இலங்கை விசேட பாதுகாப்புச் சபை அமைத்து உதவியது.
- இதனால் இலங்கையர் கோரிய வண்ணம் புதிய அரசியல் யாப்பை வழங்க ஒத்துழைத்தது.

- 1944ல் சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு, அமைச்சரவையின் வரைபையும் கவனத்தில் கொண்டு 1945ல் புதிய அரசியல் யாப்பு முன்வைக்கப்படடது.